[1993 அக்டோபர் 28

குறுகிய கால வினா எண். 1—

நவ திருப்பதி திருக்கோயில்களைப் புதுப்பித்து சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

*24251—திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், நவ திருப்பதி திருக்கோயில் களைப் புதுப்பித்து, சுற்றுலா மையமாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நவ திருப்பதி திருக்கோயில்களில் திருப்பணி செய்யவும் அத்திருக்கோயில்களுக்குத் தேவையான இடங்களில் அணுகு சாலைகள் அமைத்தல் மற்றும் சாலை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், ரூ. 240 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்திற்கு தாயுள்ளங்கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் திருக்கோயில் நிருவாக வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சுற்றுலா மையமாக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே நவ திருப்பதிகளுக்கு திருப்பணி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்கின்ற பதிலை இதிலே அறிவிக்கவில்லை. இருந்தாலும்கூட இணைப்புச் சாலைகள், பாலங்கள் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக்காக 140 இலட்சமும், சாலைகள் அமைப்புக்கு 100 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதாவது பொது மக்களிடமிருந்து அதை வசூல் செய்து சலவழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 அக்டோபர் 28]

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக்கு ஒரு கோடி ரூபாயும், இணைப்புச் சாலைகளுக்கும் பாலங்களுக்கும் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மாற்றிச் சொல்லுகிறீர்கள். திருப்பணிக்கு ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய்.

முற்பகல் 11-30

திரு. எஸ். டேனியல்ராஜ்: திருப்பணிக்கு 1 கோடியே 40 இலட்சம் ரூபாயும், பாலங்கள் மற்றும் இணைப்புச் சாலைகளுக்கு ஒரு கோடியும் ஆக 2 கோடியே 40 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்துள்ளதாக அறிவித்தார்கள். அதற்காக சிதம்பரனார் மாவட்டத்தினுடைய பொதுமக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த நவ திருப்பதிகளில், தாமிரபரணி ஆற்றுக்கு மேல்புறத்திலே ஆழ்வார் திருநகரி, திருக்கோளூர், தென் திருப்பேரை ஆகிய மூன்று திருத்தலங்களும், தாமிரபரணி ஆற்றுக்கு வடபுறத்திலே ஸ்ரீவைகுண்டம், நத்தம், திருப்புளியங்குடி, பெருங்குளம், இரட்டைத் திருப்பதி வடக்கு, தெற்கு ஆகிய ஆறு திருத்தலங்களும் அமைந்திருக்கின்றன. நவ திருப்பதிகளுக்கு ஒரே சமயத்திலே சென்று வழிபட்டால்தான் நவக் கிரக தோஷங்கள் நீங்கும் என்பது பக்தர்களுடைய ஐதீகம். அதே நேரத்திலே நவ திருப்பதிகளிலே ஒன்றான ஆழ்வார் திருநகரியிலே தான் ஆழ்வார்களின் முதன்மை ஆழ்வாரான நம்மாழ்வார் அவதரித்து, நவ திருப்பதிகளுக்குச் சென்று அவர்கள் வழிபட்டு திருவருள் பெற்றார்கள் என்பதும் வரலாறு. ஆகவே, நவ திருப்பதிகளில் ஒன்றான ஆழ்வார் திருநகரியை மையமாக வைத்து ஆழ்வார் திருநகரியிலேயிருந்து ஆழ்வார் தோப்புக்கிடையே, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதன் மூலமாக நவ திருப்பதிகளுக்கு ஒரே சமயத்திலே ஒரே நாளிலே சென்று வருவதற்குரிய வாய்ப்புக்கள் உருவாகுமென்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்து, இந்தப் பாலத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, அந்தக் காலத்தில் தெய்வீகம் கொண்டு அறங்காத்து மன்னர்கள் ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள். அந்த ஆலயங்களையெல்லாம் இந்தக் காலத்தில் பராமரிக்காமல் இருந்த நேரத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்தான் இந்த ஆலயங்களையெல்லாம் நல்ல முறையிலே பராமரித்து (மேசையைத் தட்டும் ஒலி) மக்களிடத்திலே ஒரு நல்ல பக்தியை வளர்க்க வேண்டும். மக்களிடத்திலே ஒரு நல்ல அன்பு, சிநேகிதம், நட்பு இவைகள் ஏற்பட வேண்டும் என்கின்ற முறையிலே, தெய்வீக

முறையிலே மிக அழகாகச் செய்து வருகின்றார்கள். அந்த நோக்கத்தோடுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை அவர்களே எடுத்து அறிவித்தார்கள் என் பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இந்த அரசு மக்களுக்கு ஏற்ப, எந்த அளவிற்குச் சாலைகள், பாலங்கள் வேண்டுமோ அதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு நிறைவேற்றும், பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பாலம் சம்பந்தமாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலம்தான்—அரசு பரி சீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

44—

கடமங்குடி—இடைக்கியம் கிராமங்களுக்குத் தனியே கிராம அங்காடி.

*19993—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி பாலையூர் ஊராட்சியைச் சேர்ந்த கடமங்குடி, இடைக்கியம் ஆகிய இரண்டு கிராமங்களையும் சேர்த்து தனியே கிராம அங்காடி புதிதாக திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தல்.

*22116—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி மாவட்டமாக இருப்ப தால் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?